குச்சவெளி பிரதேச சபை

திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மே 03 ஆம் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 28 ஆம் திகதி தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குச்சவெளி பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபை காசு மற்றும் அட்டுறு அடிப்படைகளில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்திருந்தது. எனினும் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டது என்ற கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளளிக்கப்படாத கேள்வி வைப்புக்கள் ரூபா 52,000 தொகையை வருமானமாகப் பதிவளிக்கப்படாமல் வைப்புக் கணக்கில் பதிவளிக்கப்பட்டுள்ளமையால் அக்கணக்கின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காணப்படுகின்றது.

(ஆ) 2012 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட புறநெகும நிகழ்ச்சித் திட்ட வேலைகளின் பெறுமதி ரூபா 153,291,825 தொகையினுள் காணி கட்டடம், பொறித்தொகுதி என்பன காணப்படுகின்ற போதிலும் அவற்றினை உாயி தலைப்பின் கீழ் வகைப்படுத்தாது புறநெகும என்ற தலைப்பின் கீழ் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளது.

#### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்கு

1996 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலத்துக்குரிய செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும் ரூபா 442,426 தொகையை உறுதிப்படுத்தி வருமானத்திற்கு மாற்றுவதற்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 3,210,635 தொகையான செலுத்தப்படாத சம்பளங்களும் கூலிகளும், வங்கி வட்டி, மூலதன வருமானம் ஆகியவற்றுக்கான விபரப் பட்டியல் மற்றும் ஆதன வரிக்கு ஆதன வரிப் பதிவேடு என்பன பேணப்படவில்லை. இதனால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு |
|---|---|---|
| (m) | 1988ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் I gpupT 5(XII) | பணம், களஞ்சியப்பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பம் இடல் என்பவை மூன்று உத்தியோகத்தர்களுக்கு நிர்வாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (M) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| | (i) இல 396 | ஆறு மாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட, ஆனால் வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 345,146 கூட்டுமொத்தப் பெறுமதியான 30 காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) இல 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 13,934,716 தொகையான வைப்புக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி சபையின் செயற்பாடுகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 5,718,425 விளைவித்திருந்ததுடன் அதற்கு முன்னைய ஆண்டின் செலவினத்திலும் கூடிய வருமானமாக ரூபா 19,987,430 விளைவித்திருந்தமை நிதிசார் விளைவுகளில் ரூபா 14,269,005 பின்னடைவைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

2.2.1 வருமான சேகரிப்பு செயலாற்றல்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | **2017** | | | | **2016** | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2017.12.31 இல் நிலுவை ரூபா "000" | பாதீடு ரூபா "000" | ஆண்டுக்கான வருமானம் ரூபா "000" | பெறப்பட்ட வருமானம் ரூபா "000" | 2016.12.31 இல் நிலுவை ரூபா "000" |
| வீதவரிகள் | 9,202 | 6,367 | 6,731 | 6,284 | 6,270 | 6,184 | 5,768 | 6,648 |
| வாடகை | 7,386 | 4,729 | 4,427 | 3,621 | 4,166 | 3,809 | 3,899 | 3,318 |
| அனுமதி பத்திர கட்டணம் | 1,290 | 1,721 | 1,721 | 4 | 1,260 | 1,372 | 1,372 | 4 |
| ஏனையவை | 11,414 | 1,777 | 1,755 | 493 | 11,021 | 14,549 | 14,545 | 471 |

2.2.2 வீதவரிகள்

1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 ஆம் பிரிவுக்கு அமைய சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் உள்ள காணிகள் மற்றும் நிர்மாணிக்கப்பட்ட வீடுகள், கட்டிடங்கள் என்பவற்றின் மீது 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 6,281,718 கூட்டு மொத்தமான வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 முத்திரைத் தீர்வை

2015 யூன் தொடக்கம் இன்றுவரை கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணத்தை கணிப்பீடு செய்து பதிவாளர் நாயகத்திடமிருந்து அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.4 இறைச்சிக் கடை குத்தகை வருமானம்

இறைச்சிக்கடை குத்தகையாளர்கள் குத்தகையை செலுத்தத் தவறும் போதே அவர்களது பாதுகாப்பு வைப்பிலிருந்து குத்தகைத் தொகையை அறவிடாமல் வருட இறுதியிலே இந்நடைமுறை பின்பற்றப்படுவதனால் ரூபா 3,044,077 தொகையான நிலுவை நிலுவைகள் அறவிடப்படாது நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுவருகின்றது. மேலும் இந்நிலுவைகளுக்கு சபையினால் காலப்பகுப்பாய்வை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்காமையால் கணக்காய்வின் போது மீதியை உறுதிப்படுத்த முடியாமல் உள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றுகை

அ) ஆரம்பிக்கப்படாத ஒப்பந்தங்கள்

I) கொல்களம் மற்றும் எரிவாயுக் கட்டடம் நிர்மாணித்தல் - நிலாவெளி

சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கொல்களம் மற்றும் எரிவாயுக் கட்டடம் நிர்மாணிப்பதற்காக ரூபா 7,054,086 தொகைக்கு ஒப்பந்தம் 2017 ஆகஸ்ட் 03 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. இவ்வேலைத்திட்டத்தினை செய்வதற்கான சாத்தியவள அறிக்கை தயாரிக்கப்படாமல் கேள்வி கோரப்பட்டு மக்கள் குடியிருப்புக்கு மத்தியில்

அமைந்துள்ள காணியை தெரிவு செய்து வேலை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதால் தங்களுக்கு சுகாதார சீர்கேடுகள் ஏற்படுமென்று மக்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. எனவே 2018 யூலை 18 ஆம் திகதி வரை இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

II) எரிவாயுக் கட்டடம் நிர்மாணித்தல் - புல்மோட்டை

---

மீளாய்வாண்டில் சபையினால் ரூபா 2,000,000 தொகைக்கு எரிவாயுக் கட்டடம் நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரை இவ்வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

---

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு திட்டத்தின் கீழ் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையம் நிலாவெளியில் ரூபா 17,943,879 தொகையில் நிர்மாணிக்கப்பட்டு 2016 khu;r; 26 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் இன்று வரை திண்மக்கழிவு சேகரிப்பு முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ள சபை நடவடிக்கை எடுத்திருக்காமையினால் செய்யப்பட்ட செலவினம் விளைவற்றுக் காணப்படுகின்றது.

இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

---

ஐக்கிய நாடுகளின் அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் அரச தலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நிலைபேறான அபிவிருத்தி மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் 2030 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்பட வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை எவ்வித அறிவினையும் கொண்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவப் பலவீனம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டு தேறப்படாத 05 காசோலைகளின் ரூபா 15,605 கூட்டுமொத்த தொகையை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) குழாய் நீர் விநியோகத் திட்டம் தொடர்பாக சனசமூக நிலையங்களுக்கு 2013 ஆம் ஆண்டில் முற்பணமாக வழங்கப்பட்ட ரூபா 700,000 தொகையை மீளப்பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த பிக்கப் வாகனம் 2015 ஆம் ஆண்டு விபத்துக்குள்ளாகி முழுமையாக சேதமடைந்திருந்த போதிலும் நிதிப்பிரமானம் 104 இன் பிரகாரம் விசாரணைக்குழுவை நியமித்து இழப்புக்களின் பெறுமதி, மற்றும் விபத்துக்கு பொறுப்பான நபர்களை இனங்காணல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) மாகாண நிதி ஒழுங்கு விதி 163.3 இன் பிரகாரம் முற்பணங்கள் அனைத்து 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட்ட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 3,529,137 மொத்தத் தொகையான முற்பணங்கள் இன்று வரை சீர் செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) குறித்தொதுக்கப்பட்ட அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் கட்டுக்குளத்தில் ரூபா 316,460 தொகைக்கு நிர்மாணிக்கப்பட்ட பொதுக்கிணறு காணப்படும் காணியின் உரிமை தனியார் ஒருவருடையதாகக் காணப்படுகின்ற போதிலும் இக்காணியின் உரிமையினை சபையின் பெயருக்கு மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம், பிரதேச சபையின் எல்லைக்குள் செயற்பட்டுவரும் சுற்றுலா விடுதிகளின் ஆண்டு வருமானத்தில் 01 சதவீதத்தை உரிமத் தீர்வையாக சபை அறவிடுதல் வேண்டும். எனினும் சபையின் எல்லைக்குள் செயற்பட்டு வரும் 10 சுற்றுலா விடுதிகளுக்கான 01 சதவீத தீர்வையினை அறவிடாமையினால் அண்ணளவாக ரூபா 1,500,000 தொகை வருமானத்தை சபை இழக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

(எ) அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் 2014 நவம்பர் 12 ஆம் திகதிய 25/2014 இலக்க சுற்றறிக்கையின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்கத்தின் முன் அனுமதியின்றி சபையின் செயலாளரினால் 2015 ஆம் ஆண்டில் 140 ஊழியர்களுக்கு அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்ட போதிலும் அவ்வாறு ஊழியர்களை நியமிப்பதற்கான தேவைப்பாடு சபையில் காணப்படவில்லை. மேலும் இவ் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக சபையின் முன்னாள் செயலாளரால் 2015 ஆம் ஆண்டு பெறப்பட்ட ரூபா 1,493,294 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் இறுதிவரை சீர்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தலைமைச் செயலாளர் செயலகச் சுற்றறிக்கை 10/2009 பிரிவு (2) இன் பிரகாரம் வருடாந்த இருப்புக் கணக்கெடுப்பு சபைக்கான கொடுப்பனவு தலைவருக்கு ரூபா 5,000 படியும் அங்கத்தவர்களுக்கு தலா ரூபா 4,000 படியும் வழங்க முடியும். எனவே 2015 ஆம் ஆண்டிற்கான கொடுப்பனவாக கூட்டுமொத்தமாக ரூபா 13,000 தொகையே வழங்கியிருக்க வேண்டும். எனினும் சபை ரூபா 25,000 தொகையை வழங்கியமையால் ரூபா 12,000 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. 2018 யூலை 18 ஆம் திகதி வரை இம் மேலதிகத் தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) ஓய்வூதிய திணைக்களத்தின் 2011 பெப்ரவரி 24 ஆம் திகதிய 02/2011 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் உள்@ராட்சி நிறுவனங்களில் அமைய மற்றும் தற்காலிக அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு பணம் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும் இதற்கு மாற்றமாக சபையில் கடமையாற்றிய ஊழியர்களுக்காக அரச சேவை சேமலாப நிதியத்திற்குப் பதிலாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புச் செய்யப்பட்டதுடன் 2010 சனவரி தொடக்கம் 2014 நவம்பர் மாத காலத்திற்கான ஊழியர் சேமலாப நிதியத்துக்கான பங்களிப்புப் பணத்தை குறித்த காலத்தில் செலுத்தாத காரணத்தினால் அந்நிதியம் ரூபா 1,915,306 தொகையான தண்டப்பணத்தை செலுத்துமாறு வேண்டியிருந்தது. எனினும் 2018 யூலை 18 ஆம் திகதி வரை இம் மேலதிகத் தொகையினை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) பிரதேச சபையினால் புல்மோட்டையில் ரூபா 24,444,588 செலவில் 35 கடைகள் கொண்ட சந்தைக் கட்டிடம் புல்மோட்டை வாவியில் மண் நிரப்பப்பட்டு நிர்மாணிக்கப்பட்டமையினால் மத்திய சுற்றாடல் அதிகார சபை, கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் போன்றவை அனுமதி மறுத்திருந்தது. மேலும் இக்கடைகளை நிர்மாணிப்பதற்கு முன்னர் வியாபாரத்திற்கு பொருத்தமான இடமா என்பதை ஆராயாது கடைகள் நிர்மாணிக்கப்பட்டமையினால் நிர்மாணிக்கப்பட்ட நாளிலிருந்து இன்று வரை கடைகள் அனைத்தும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

(ஓ) சபைக்குச் சொந்தமான LB - 8657 தண்ணீர் பவுசரை திருத்துவதற்காக 2015 யூன் மாதம் வாகனம் திருத்தும் இடத்திற்கு சபையினால் கையளிக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 18 ஆம் திகதி வரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது காணப்படுகின்றது.

(ஔ) கரையோரப் பாதுகாப்புத் திணைக்கத்திடமிருந்து 2017 யூன் 06 ஆம் திகதி நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட உழவு இயந்திரத்திற்கான வருமான உத்தரவுப் பத்திரம் மற்றும் காப்புறுதி என்பன பெற்றுக்கொள்ளப்படாத நிலையில் சபையின் செயலாளரின் பணிப்புரைக்கமைய பெரிய குளம் பகுதிக்கு கடமைக்காக 2017 ஆகஸ்ட் 17 ஆம் திகதி விடுவிக்கப்பட்ட போது விபத்துக்குள்ளாகியது. இது தொடர்பாக நிதி

ஒழுங்குவிதி 104 இன் பிரகாரம் விசாரணைக் குழுவை நியமித்து இழப்புக்களின் பெறுமதி மற்றும் விபத்துக்கு தொடர்பான நபர்களை இனம்காணல் தொடர்பாக 2018 யூலை 18 வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

3.3 மனிதவள முகாமைத்துவம்

சபையிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிச் சென்ற 05 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 212,805 தொகையான நிலுவைக் கடனை அவர்களிடம் அல்லது அவர்களின் பிணையாளர்களிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

சபையின் தவிசாளர் 2015 பெப்ரவரி 05 ஆம் திகதியும், 2015 மார்ச் 23, 24 மற்றும் 25 ஆம் திகதிகளிலும் உத்தியோகபூர்வ ரீதியாக சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட உப அலுவலகங்களுக்கும் உள்@ராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கும் சென்றிருந்தமையானது அவர் அப்பிரயாணத்திற்காகப் பயன்படுத்திய அலுவலக வாகனத்தின் ஓட்டப்பதிவுப் புத்தகத்தின் குறிப்புகள் உறுதிப்படுத்திய போதிலும் அத்திகதிகளில் அவர் கொழும்புக்கு உத்தியோகபூர்வ ரீதியாக பயணம் செய்ததாகக் கூறி இணைந்த படிகளும் போக்குவரத்துப் படிகளுமாக ரூபா 43,100 தொகையினைப் பெற்றிருந்தார். 2018 யூலை 18 ஆம் திகதி வரை தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5 சொத்து முகாமைத்துவம்

3.5.1 சொத்துக்களைப் பதிதல்

ஏனைய நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் ஆறு வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவற்றை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.5.2 பயன்படுத்தப்படாமலுள்ள சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையில் காணப்படும் 02 உழவு இயந்திரம், பிக்கப், மோட்டார் சைக்கிள், டிப்பர், திண்மக்கழிவகற்றும் பவுசர் என்பன திருத்தம் செய்து பயன்படுத்தக் கூடிய நிலையில் காணப்படுகின்ற போதிலும் 01 தொடக்கம் 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்து பயன்படுத்த சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 1,359,987 தொகைக்கு நிர்மாணிக்கப்பட்ட தென்னமரவாடி நூலகக் கட்டடம் 2018 யூலை 18 ஆம் திகதி வரை பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது.

3.6 ஒப்பந்த முகாமைத்துவம்

3.6.1 திண்மக் கழிவு சேகரிப்பு நிலைய கட்டிட நிர்மாணம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிலிசரு திட்டத்தின் கீழ் திண்மக்கழிவு சேகரிப்பு நிலையத்தை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தம் ரூபா 4,946,825 தொகைக்கு சில்மியா ஒப்பந்தகாரருக்கு 2015 ஒக்தோபர் 19 ஆம் திகதி வழங்கப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இத்திண்மக்கழிவு நிலையத்திற்கான கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்ட போது இக்கட்டடத்திற்கான மின்சாரம் வழங்கல், நீர் விநியோகம் மற்றும் சுற்றுவேலி அமைத்தல் போன்ற வேலைகள் மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

எனவே இக்கட்டிட வேலை பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

(ii) இவ்வேலை 2015 திசெம்பர் 19 ஆம் திகதி ஒப்பந்தக்காரரால் நிறைவு செய்யப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். எனினும் 2018 யூலை 18 ஆம் திகதி வரை ஒப்பந்தக்காரர் நிர்மாண வேலைகளை நிறைவு செய்யாது கைவிட்டமையினால் முடிவுற்ற 60% ஆன வேலைக்காக ரூபா 2,947,682 தொகை செலவு செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட இக்கட்டடம் விளைவற்ற செலவினமாக மாறியுள்ளது. அத்துடன் திண்மக்கழிவு சேகரிக்கும் முகாமைத்துவ செயற்பாடுகளையும் சபையினால் முன்னெடுக்க முடியாது காணப்படுகின்றது.

(iii) சபையின் எல்லைக்குள் சேகரிக்கப்படும் குப்பைகள் புல்மோட்டையில் உள்ள தனியார் காணி ஒன்றில் கொட்டப்பட்டு வருகின்றமையினால் அப்பகுதியில் சூழல் பிரச்சனைகள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

3.6.2 செந்தூர் கிராம வீதிக்கு கொங்கிரீட் இடுதல்

---

மாகாண சபைகள் மற்றும் உள்@ராட்சி அமைச்சின் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் செந்தூர் கிராம வீதிக்கு கொங்கிரீட் இடுதலுக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பெறுகை வழிகாட்டியின் 6.2.2 இன் பிரகாரம் தேசிய பெறுகை நடைமுறை (NCB) பின்பற்றப்படும் போது குறைந்தது 21 நாட்கள் காணப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையினால் கோரப்பட்ட விலை மனு 14 நாட்களையே கொண்டிருந்தது.

(ஆ) 2017 யூன் 30 தொடக்கம் 2017 யூலை 13 ஆம் திகதி வரை விலை மனுக்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய காலமாக சபை நிர்ணயித்திருந்த போதிலும் சபையினால் விலை மனு கோருவதற்கான பத்திரிகை விளம்பரம் 2017 யூலை 01, 04 ஆம் திகதிகளில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்ததுடன் இக்காலப்பகுதியில் 04 நாட்கள் விடுமுறை நாட்களாகவும் காணப்பட்டிருந்ததுடன் 09 நாட்களே விலை மனுக்கள் விநியோகிக்கக்கூடிய நாட்களாக காணப்பட்டமையினால் பெறுகை வழிகாட்டியின் 1.2.1 இன் பிரிவு (இ) இன் நோக்கம் அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) இவ் வேலைக்கு 06 ஒப்பந்தகாரர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு விலைமனு மதிப்பாய்வினைச் செய்யாமல் ஒரு ஒப்பந்தகாரருக்கு ரூபா 4,262,496 தொகைக்கு ஒப்பந்தத்தினை வழங்கியிருந்தது. மேலும் வழங்கப்பட்ட ஒப்பந்தக்காரர் வேலையை கைவிட்டமையால் அடுத்த தகைமையுடைய ஒப்பந்தகாரருக்கு வேலை வழங்க முடியாமல் போனதுடன் மீண்டும் கேள்வி கோர வேண்டிய நிலை ஏற்பட்டது.

(ஈ) தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர் குறித்த வேலையினை பொறுப்பேற்றதன் பின்னர் அவ்வேலையினை ஆரம்பிக்காது எவ்வித அறிவித்தலுமின்றி கைவிட்டுள்ளமையால் பெறுகை வழிகாட்டி 5.3.13 இன் பிரிவு (ஈ) க்கு அமைய ரூபா 51,200 விலைமனுப் பிணை (Bid Bond) காசாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை வழிகாட்டி 8.11.4 இன் பிரகாரம் ஒப்பந்தக்காரர் மீது மேலதிக நடவடிக்கையினை சபை எடுத்திருக்கவில்லை.

(உ) சபையினால் இவ்வேலைக்கு மீண்டும் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டிக் கேள்வி (LNCB) கோரப்பட்ட போது பெறுகை வழிகாட்டியின் 6.2.2 இன் பிரகாரம் குறைந்தது 14 நாட்கள் காணப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 07 நாட்கள் மாத்திரமே உள்ளடக்கி கேள்வி கோரப்பட்டிருந்ததுடன் இரத்துச் செய்யப்பட்ட கேள்வியில் காணப்பட்ட 02 ஒப்பந்தக்காரர்களையே மீண்டும் தெரிவு செய்து அவர்களுக்கு எவ்வித எழுத்து மூலமான அறிவித்தல்களும் வழங்காமல் மட்டுப்படுத்தப்பட்ட தேசிய போட்டிக் கேள்விக்கான விலை மனுக்கள் வழங்கப்பட்டு அவர்களில் ஒருவருக்கு ரூபா 5,000,000 பெறுமதிக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது.

(ஊ) சபை பெறுகை நடைமுறையினை முறையாகப் பின்பற்றி சரியான தகைமையுடைய ஒப்பந்தக்காரரினை ஆரம்பத்திலேயே தெரிவு செய்யாமையினால் தற்போது வழங்கப்பட்டுள்ள ஒப்பந்தத் தொகைக்கும் இரத்துச் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொகைக்கும் இடையிலான வித்தியாசம் ரூபா 737,504 தொகையும் விலை மனு கோரலுக்காக செய்யப்பட்ட விளம்பரச் செலவு ரூபா 173,672 தொகையும் சேர்த்து கூட்டுமொத்தமாக ரூபா 911,176 தொகை இழப்பு ஏற்பட்டுள்ளது.

3.6.3 கலாச்சாரக் கட்டடம் நிர்மாணம்

புறநெகும நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கலாச்சார மண்டபம் நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 5,656,434 தொகைக்கு 2016 ஏப்ரல் 18 ஆம் திகதி ஒரு ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் வழங்கப்பட்ட முன்மொழிவுக்கு இணங்க கலாச்சார நிகழ்வுகளை நடாத்துவதற்கான கலாச்சார மண்டபத்தினை அந் நோக்கத்திற்கு எடுத்துக் கொள்ளாது அதனை மக்கள் வங்கிக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டு அதன் வடிவம் மாற்றியமைக்கப்பட்ட போது புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சுவரில் $7.78m^3$ அளவுடைய உடைய ரூபா 83,246 பெறுமதியான சுவர் அகற்றப்பட்டது.

(ஆ) இங்கு $11.01m^2$ அளவுடை கதவு பொருத்தப்பட்டதாக ரூபா 97,559 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வின் போது $7.77m^2$ அளவுடைய கதவே பொருத்தப்பட்டிருந்தது. எனவே இதற்கான மேலதிக கொடுப்பனவாக ரூபா 28,621 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VII பிரிவு 168(1) இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் ஒரு மாதகால தாமதத்தின் பின்னர் 2018 மே 03 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 12% தொடக்கம் 97% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதிலளிக்கப்படாத ஐயவினாக்கள்

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எமது திணைக்களத்தினால் அனுப்பப்பட்டு 14 நாட்களுக்குள் பதிலளிக்கக் கோரியிருந்த மூன்று ஐயவினாக்கள் தொடர்பாக இன்றுவரை பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் ஒவ்வொரு கட்டுப்பாடுகளிற்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் மீது விசேட கவனம் செலுத்த வேண்டும்.

| கட்டுப்பாடுகள் | விசேட கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | (i) பேரேடுகள் நாளது வரையாக முறையாக பேணப்படுதல் வேண்டும். |
| | (ii) சொத்துக்கள் செலவீனங்களின் தன்மை அடிப்படையில் வகைப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) நிலையான சொத்துப் பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |
| | (ii) களஞ்சியப் பேரேடு முறையாகப் பேணப்படல் வேண்டும். |
| | (iii) பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) வருமான அறவீட்டு முகாமைத்துவம் | வருமான நிலுவைகளை அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) ஒப்பந்த முகாமைத்துவம் | (i) பெறுகை வழிகாட்டி, சுற்றுநிருபங்கள் முறையாக பின்பற்றப்படல் வேண்டும். |
| | (ii) ஒப்பந்தங்களை குறித்த காலப்பகுதிக்குள் நிறைவுறுத்தப்படுதல் வேண்டும். |